1968 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தஞ்சை மாவட்டத்தில், சமுதாயக் கிணறுகள் வேண்டும் என்று கோரிக்கை சில பகுதி களிலிருந்து வந்திருக்கிறது. கனம் உறுப்பினர் போன்றவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால், பஞ்சாயத்துத் தலைவர் மற்றவர் கள் எல்லோரும் சேர்ந்து அப்படிக் கிணறுகள் வேண்டும் என்று கேட்டால், அது பரிசீலனை செய்யப்படும். திரு. முருகையன் ஒரு கிணறு வேண்டும் என்று கடந்த ஐந்தாண்டு காலமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். சரியான சூழ்நிலை இல்லாததால் அது நடக்கவில்லை. இரண்டொரு இடங்களிலிருந்து தான் கோரிக்கை, தஞ்சையிலிருந்து வந்திருப்பதால், இன்னும் அதிகமாக வேண்டும் என்று, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், விவசாயிகள், எல்லோரும் முயற்சி எடுத்துக் கொண்டால், யோசித்து நடவடிக்கை எடுக்கலாம். இரண்டாவதாக, பவர் ஸ்ப்ரேயர் வேண்டும் என்று கேட்டார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் பவர் ஸ்ப்ரேயர் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஒன்றல்ல, நான்கு வாங்கி வைத்து, விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்க வேண்டுமென்று குறிப் பிடப்பட்டிருக்கிறது. எந்த யூனியனாவது அப்படி வாங்கி வைக்கவில்லை என்று தகவல் கொடுத்தால், அது கவனிக்கப்படும். பொது நிதியிலிருந்து வாங்கி வைக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

Wild Life Week

* 370 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether during the wild life week in October 1967, wild animals from the Madras Zoo were taken out in procession through the streets of Madras City; and

(*b*) if so, the object of such procession?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) வன விலங்குகளைப் பாதுகாப்பதில் பொது மக்களிடையே ஆர்வ மூட்டுவதும் நமது மாநிலத்திலுள்ள வன விலங்குகள்பால் அவர்களுக்குள்ள கடமைகளையும் பொறுப்பு களையும் நினைவுறுத்துவதும் அதன் நோக்கமாகும்.

திரு. கே. வினயகம் : சார், சென்னை மாநகராட்சி நடத்துகிற வன விலங்கு விழாவில், வீதிகளில் கூண்டில் வைத்து, மிருகக் காட்சி நடத்துகிறார்கள். நான் ஒரு ஆண் சிறுத்தை தந்திருக் கிறேன். நம்முடைய நண்பர் திரு. எம். ஜி. ஆர்; ஒரு பெண் சிறுத்தை கொடுத்திருக்கிறார்கள். இந்த இரண்டும் ஆணும் பெண்ணும் கூடிக் கலந்து, குடும்பம் நடத்தி (சிரிப்பு) குட்டிகள் கூடப் போட்டிருக்கிறது.

I am serious. I am not joking.

அப்படியிருக்கும்போது, இந்தக் காதலர்களைப் பிரித்து, ஆண் சிறுத்தையை அங்கேயே அடைத்து வைத்துவிட்டு, பெண் சிறுத்தையை மட்டும் கூண்டில் வைத்து வீதிகளில் 'Presented by M.G.R.' என்று போட்டுக்கொண்டு போகிறார்களே, நான்

கொடுத்த ஆண் சிறுத்தையை அங்கேயே வைத்து, நான் கொடுத்தது என்கிற பலகையைக்கூட எடுத்துவிட்டு இருக்கிறார்கள். இதனால், ஆண் சிறுத்தை தவித்துக் கொண்டு இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : திரு. விநாயகம் அவர்கள் ஒரு ஆண் சிறுத்தை கொடுத்திருப்பது உண்மைதான், நான் கூடப் பார்த்திருக்கிறேன். ஆனால், அதனால் இப்பொழுது நடக்கக்கூட முடியவில்லை. (பலத்த ஆரவாரம்) தீனி வாங்கிக் கொடுக்கக் கூட கனம் அங்கத்தினர் தன் சம்பளத்தில் ஒரு பகுதி கொடுக்க வேண்டும் என்ற நிலையில் இருப்பதைத் தெரிந்து கொண்டு இருப்பார்கள்.

திரு. கே. விநாயகம் : சார், நான் கொடுத்த ஆண் ஒரு வேளை வயதாகியிருக்கலாம். எம். ஜி. ஆர். கொடுத்த பெண் படுத்தே விட்டது, அதற்கு 70 வயதாகிறது. ஆகவே, புதிதாகத் தூண்டுதல் கொடுக்க யோசனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நான் பதிலுக்கு எம். ஜி. ஆர். சிறுத்தை பற்றிச் சொல்ல வேண்டும் . . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதிலே சம்பந்திகளே கூடிப் பேசிக் கொண்டால் (பலத்த ஆரவாரம்) நலமாக இருக்கும்.

அரிசன நலத்துறை உயர்நிலைப் பள்ளிகள்

* 371 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1967-68-ம் கல்வியாண்டில் இம் மாநிலத்தில் ஹரிஜன நல இலாக்காவால் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள் எங்கெங்கு திறக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1967-68 கல்வி ஆண்டில் ஹரிஜன இலாகாவால் புதியதாக ஹரிஜனங்களுக்காகத் தனிப்பட்ட உயர்நிலைப்பள்ளி எங்கும் திறக்கப்படவில்லை. ஆனால் கீழ்க்கண்ட மூன்று பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாக மாற்ற உத்திரவிடப்பட்டது :—

(1) அரிசன நல இடைப்பள்ளி—வடகரை—செங்கல்பட்டு மாவட்டம்.

(2) அரிசன நல ஆரம்பப்பள்ளி, அஜீஸ்நகர் குடியிருப்பு, ஊமங்கலம் அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா, தென் ஆர்க்காடு மாவட்டம்.

(3) அரிசன நல உயர்நிலைப்பள்ளி—ராஜதானி கிராமம், மதுரை மாவட்டம்.